## 2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

## அ.வ.எண்.410/2019

**27.11.2023 வா.சா.2. திருமதி. மாரியம்மாள்**

**1, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் தற்போது தாக்கல் செய்த வா.சா.ஆ.15, 16 ஆவணங்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 எந்த வருடத்திய ஆவணம் என்றால் 1987 ம் ஆண்டு ஆவணம். அந்த ஆவணத்தில்உ ள்ள சொத்தின் சர்வே எண். 190/2 அதன் விஸ்தீரணம் மொத்தம் 96 செண்ட் அதில் 56 செண்டுக்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.16 ல் மொத்த விஸ்தீரணம் 40 செண்ட் என்றால் சரிதான், அதுவும் எங்கள் இடம் தான். இந்த பிரதிவாதிகள் கட்சி படி 1990 க்கு பிறகு இந்த இடங்களுக்கு அரசாங்கம் இலவச பட்டா வழங்கிவிட்டது என்றால் எங்கள் இடத்தில் பட்டா வழங்கவில்லை. வா.சா.ஆ.16 குறித்து என் தாயார் பிராதிலேயே எதுவும் குறிப்பிடவில்லை என்றாலும் என்னுடைய நிரூபண வாக்கு மூலத்திலும் இதை பற்றி குறிப்பிடவில்லை என்றாலும் இந்த ஆவணம் பற்றி தற்போது தான் எங்களுக்கு தெரியவந்தது. வா.சா.ஆ.16 குறித்து தற்போது தான் தெரியவந்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் இந்த ஆவணத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**2 முதல்4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்கா ஒத்திவைக்கப்படுகிறது.